# ஈழநாதம்

**THE EELANAATHAM**

நாதம் 01 | சுக்கில ஷூ சித்திரை மீ 20-ம் உ | திங்கட்கிழமை | (02 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 05 | ஓசை 43


## என்னைப் பற்றிய வதந்தியை நீக்குவது பத்திரிகையாளரின் பணியே'' - பிரபா

(யாழ்ப்பாணம்)

என்னைப் பற்றிய வதந்திகளை நீக்கும் பொறுப்பு உங்களுடையது. நான் இறந்துவிட்டேன் ஊனமடைந்துவிட்டேன் என்றுள்ள வதந்திகளை மக்களின் பிரதிநிதிகள் போன்ற பத்திரிகையாளர்களே நீக்க வேண்டும் என நேற்றுப் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப்பேசிய விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தெரிவித்தார்.

சுடுபட்டுக் கொண்டதாகக் கூறிய நாங்கள் இருவரும் தற்பொழுது உங்கள் முன் இருக்கின்றோம். என்மீது உங்களுக்கு சந்தேகம் இருப்பின் தொட்டுணர்ந்து கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

வதந்திகள் மிகவும் பயங்கரமானவை எனவும் எனது மகள் இறந்து விட்டாள் என்ற வதந்தி எனக்கே சந்தேகத்தை தோற்றுவித்தது எனவும் தெரிவித்தார்.





இறந்துபோனதாக புரளி கிளப்பியவர்கள் இப்பொழுது என்ன சொல்லப் போகிறார்கள் என்று கேட்பதுபோல் தலைவர் பிரபாகரன் நேற்று யாழ். நகரில் பத்திரிகையாளர்களைச் சந்திக்க வந்தபோது யாழ். மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் பானுவும் அரசியல் பொறுப்பாளர் டொமினிக்கும் நின்று வரவேற்பதை முதல் படத்திலும் பத்திரிகையாளர் மாநாட்டின்போது தலைவர் பிரபாகரனுடன் பிரதித்தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா), விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரெத்தினம் (யோகி)யையும் மற்றப் படத்திலும் காணலாம்.

யாழ். ஆஸ்பத்திரியில்

## ஒரே சூலில் மூன்று குழந்தைகள்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை பத்து மணியளவில் யாழ். வைத்தியசாலையில் ஒரு தாய்க்கு மூன்று குழந்தைகள் பிறந்துள்ளன. விஸ்வமடு உடையார்கட்டு என்னும் இடத்தைச் சேர்ந்த வேலாஜி (வயது 38) என்பவருக்கே மேற்படி மகப்பேறு சம்பவித்தது.

ஒரு ஆணும், இரண்டு பெண்களுமாக மூன்று குழந்தைகளும் நலமே உள்ளதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

சத்திர சிகிச்சையின் பின் பிறந்த இக் குழந்தைகளுக்கு ஏற்கனவே ஐந்து சகோதரங்கள உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(லோ)

# வட - கிழக்கு இணைப்புக்கு வாக்கெடுப்பா?

# நடக்காது; நாம் பிரித்துப் பார்க்கவில்லை!

## தென்மராட்சியிலிருந்து 64 பேர்பல்கலைகழகத்துக்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரித் தொகுதியிலிருந்து பரவலாக கடந்த ஆண்டு சுமார் அறுபத்திநா...

...லுள்ள மகா வித்தியாலயங்களிலும், அரச அலுவலகங்களிலும் வெளிக்கள வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

## பத்திரிகையாளர் மத்தியில் தலைவர் பிரபா

(யாழ்ப்பாணம்)

"வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பிற்கு ஓர் கருத்துக் கணிப்பை நடத்துவது என்ற பேச்சிற்கே இடமில்லை. நாங்கள் அதை ஒத்துக்கொள்ளப் போவதும் இல்லை...

## 10 இலட்சம் ரூபா செலவில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரித் தொகுதியிலிருந்து பரவலாக கடந்த ஆண்டு சுமார் அறுபத்திநாலு மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப்படித் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இப்பொழுது தென்மாராட்சிப் பகுதியிலுள்ள மகா வித்தியாலயங்களிலும், அரச அலுவலகங்களிலும் வெளிக்கள வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த அடிப்படையில் இப்பொழுது சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்திலும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, டிறிபேக் கல்லூரி

(6ஆம் பக்கம் பார்க்க)

"வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பிற்கு ஓர் கருத்துக் கணிப்பை நடத்துவது என்ற பேச்சிற்கே இடமில்லை. நாங்கள் அதை ஒத்துக்கொள்ளப் போவதும் இல்லை. எங்கள் தாயக மண்ணை நாங்கள் பிரித்துப்பார்த்து எப்பொழுதும் எண்ணுவதும் இல்லை" என நேற்று பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் கொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற வதந்தியின் பின்னர் நேற்றுக் காலை 10-30 மணியளவில் முதல் முதலில் உள்ளூர்ப் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அவருடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா) செயலாளர் யோகரத்தினம் (யோகி,) அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் பானு. யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் டொமினிக் மேலும் பல விடுதலைப்புலிகள் உறுப்பினர்களும் இச் சந்திப்பின் போது உடன் இருந்தனர்.

பத்திரிகையாளர் மகாநாடு ஆரம்பமாகியதும் தலைவர் பிரபாகரன் நீண்டகாலத்திற்குப்பின்னர் பத்திரிகையாளர்

(6ஆம் பக்கம் பார்க்க)

# 10 இலட்சம் ரூபா செலவில் உதவி அரச அதிபர் பணிமனை

(வடமராட்சி கிழக்கு)

10 இலட்சம் ரூபா செலவில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையும். விடுதியும் விரைவில் அமைக்கப்படும்.

யாழ். அரசாங்க அதிபரும், மாவட்ட ஆணையாளருமான திரு. அன்ரன் அல்பிறட் வடமராட்சி கிழக்கு கழகங்களுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. த. சந்திரசேகரம் தலைமை

(6ஆம் பக்கம் பார்க்க)

# அன்னை நினைவாக சிரமதானம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள சமயபுரம், மணிபுரம், கணேசபுரம் கிராமங்களில் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் நினைவாக சனிக்கிழமை சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

சுமார் 250 மக்கள் கலந்து கொண்ட இச்சிரமதான வேலையின் இறுதியில் வன்னிப் பிராந்திய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு.சந்திரன் கலந்து கொண்டு உரையாற்றினார். இவரினால் அன்னை பூபதியின் நினைவுத் தூபிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

திரு.சந்திரன் அங்கு பேசும் போது, பெண்ணினத்திற்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு ஊழியர் தற்கொலை

(கோண்டாவில்)

நான்கு பிள்ளைகளுக்கு தந்தையும், ரயில் கடவை பாதுகாப்பு ஊழியருமான ஒருவர் நச்சுக்காய் சாப்பிட்டு தற்கொலை செய்துகொண்டார். சுந்தர்மடம் பழப் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட யேசுராசா (வயது 35) என்பவரே சில பிரச்சினைகள் நிமித்தம் இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

(34)

# வாழ்க்கை முடிவை அண்மித்த கட்டங்களும் இருந்தன

(யாழ்ப்பாணம்)

இந்தியாவுடன் ஏற்பட்ட யுத்தத்தின்போது சில சந்தர்ப்பங்களில் எங்கள் வாழ்க்கை முடிவை நெருங்கி விட்டது என்ற அளவில் நெருக்கமாகச் சந்தித்தோம். அதே வேளையில் தந்திரமாக அதனைத் தவிர்த்துக் கொண்டோம்.

நாங்கள் இருந்த இடங்கள் மீது 250 கிலோவிற்கு கூடுதலான நிறைகொண்ட குண்டுகள் போடப்பட்டன என விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரன் தெரிவித்தார்.

நாங்கள் இந்த நிலை அடைவதற்கு எமது இயக்க உறுப்பினர் செய்த அளப்டரிய தியாகங்களே காரணமாகும். அவர்கள் நினைவு என்றும் எங்கள் உள்ளங்களில் நிலைத்திருக்கும் என்றும் அவர் கூறினார்.

# ஆய்வை அடிப்படையாகக்கொண்டு மீன்பிடித் தொழில் சட்டதிட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

விரைவில் வட மாகாணத்தில் மீன்பிடித்துறை சம்பந்தமாக பிரதேசரீதியான ஓர் ஆய்வு செய்யப்பட்டுப் புள்ளி விபரங்கள் சேகரிக்கப்படும். அதனை அடிப்படையாக வைத்து மீன் பிடித்தொழில் சட்ட திட்டங்கள் அடங்கிய ஒரு யாப்பை நாம் மீனவ குடிமக்கள் மத்தியில் அறிமுகப்படுத்த உள்ளோம் என யாழ் மனோகராத் தியேட்டரில் நடைபெற்ற குடாநாட்டு மீன் பிடித்தொழிலாளர் சங்கங்களுடனான கலந்துரையாடல் ஒன்றில் வலி

(6ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் மாவட்ட வைத்திய அதிகாரி இல்லை

(வவுனியா)

வவுனியா அரசாங்க வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரிக்கான பகுதி (D.M.O) வெற்றிடமாக இருக்கிறது.

இப்பதவிக்கு தற்காலிகமாக நியமிக்கப் பட்டிருந்த வைத்திய அதிகாரியான ஸ்ரீராஜேஸ்வரன் யாழ். வைத்திய சாலைக்கு மாற்றலாகி போனதையடுத்தே மேற்படி பகுதி வெற்றிடமாக இருக்கிறது.

வவுனியா அரசாங்க வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியாக இருந்த திரு. நிரஞ்சன் வேறொரு வைத்தியசாலைக்கு மாற்றலாகிப் போனதைத் தொடர்ந்து சில ஆண்டுகளாக இப் பணியை ஸ்ரீராஜேஸ்வரன் கவனித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(தி)

# யாழ். ஆயர் மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண சபையை உடனடியாகக் கலைத்து புதிய தேர்தலை நடத்த வேண்டுமென்று யாழ். ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எழுதிய கடிதத்தில் கேட்டிருப்பதாக நேற்று முன்தினம் இரவு பி.பி.ஸி. தமிழோசை ஒலிபரப்பிய செய்தியை யாழ். ஆயர் மறுத்துள்ளார். ஜனாதிபதிக்குத் தாம் கடிதம் எதுவும் எழுதவில்லையென்றும் யாழ். ஆயர் தெரிவித்துள்ளார்.

# டிக்ஷித்தின் தவறான போக்கு ராஜீவைத் தப்பாக நடத்தியது

(யாழ்ப்பாணம்)

இந்தியா இலங்கைத் தமிழ் தேசிய இனத்தின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் இந்தியாவின் தூதுவராக இருந்த டிக்சிற் தனது நாட்டிற்கு விசுவாசமாக இருந்தாரே ஒழிய, தமிழருடைய பிரச்சினையைப் புரிந்து கொள்ளவில்லை என விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், டிக்சிற்றின் தவறான கருத்துக்கள் இந்தியப் பிரதமர் ராஜீவையும தவறான முடிவுகள் எடுக்கத் தூண்டியது எனவும் தெரிவித்தார்.

இந்தியா எப்பொழுதும் தனது அதிகாரத்தை எம்மீது செலுத்துவதிலேயே கருத்தாக இருந்தது. எங்கள் தேசிய உணர்விற்கு மதிப்பளிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் இந்தியா ஆரம்பத்திலிருந்தே எம்மீது அதிகார

(6ஆம் பக்கம் பார்க்க)

# சாவகச்சேரியில் சனி அரை நாளும் ஞாயிறு முழு நாளும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிநகரில் வர்த்தக நிலையங்களும், ஏனைய கடைகளும் பிரதி சனிக்கிழமைகள் தோறும் நண்பகல்

(6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் தொண்டர் படையும் சேவை

(சாவகச்சேரி)

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் தொண்டர் படை ஒன்று. தமிழீழ விடுதலைப புலிகள் முன்னணியினருடன் இணைந்து மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்தில் பங்குனித்திங்கள் விழாக்காலங்களில் கடமை புரிகிறது. இத் தொண்டர் படையை மட்டுவில் இந்து இளைஞர் மன்றம் அமைத்துள்ளது.

விடுதலைப் புலிகள் முன்னணியும், மட்டுவில் இந்து இளைஞர் மன்ற தொண்டர் படையினரும் இணைந்து செயற்படுவதனைத் தொடர்

(6ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

கருவாட்டுக்கு உகந்த அரைத்த உப்பு மொத்த மாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
M. G. M. No. 777, K. K. S. Road Jaffna B/507

வரலாறு ஆண்டு 6 ஆண்டு 7 1990 ஆம் ஆண்டு தொடக் கம் நடைமுறைப் படுத்தப் படுகின்றது பாடத்திட்டத் தை தழுவி எழுதப்பட்டது ஆக்கம் ஆலோசனை எம் எஸ் அப்துல் ரஹீம் தி. கமலநா தன். B.362

சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக் கும் உங்கள் விருப்பமே எங் கள் சேவை! பற்பல டிசைன் களில் பற்பல ரகங்கள்! சாப் பாட்டுப் பீங்கான்கள் செற் கட்டிகள் தாச்சிச் சட்டிகள் ரேகள் சோஸ்பான்கள்பொரி யல் சட்டிகள் டின்னர் செற் கள் ரீ செற்கள் கோவிற்சாமா ன்கள் இன்னும் பற்பல நம் பிக்கை நிதானம்.
RAJZ BRAND பார்வை அறை S A தேவதாசன் சூறாவத்தை சுன்னாகம்.
(B 414)


## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மாநகரசபை ஊழியர்க ளுக்கு சுகாதார அறிவை வளர்க்கும் முகமாக சுகாதார கருத்தரங்கு ஒன்று யாழ். நாவ லர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இக் கருத்தரங்கிற்கு சுகா தார, வைத்திய அதிகாரிகள் பலர் பங்கு கொண்டு உரை யாற்றினர். மாநகரசபை ஊழி யர்களுக்கு ஆரம்ப சுகாதாரம் மகப்பேற்று இடைவெளி, வயிற்றோட்டம், சின்னமுத்து, நீரிழிவு நோய், பற்சுகாதாரம் உட்பட பல வைத்திய ஆலோ சனைகளும் வழங்கப்பட்டது.
(லோ)

## ஏறாவூரில் தொலைபேசி தூக்கம்

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பகுதிக்கான தொலைபேசி சேவை மீண்டும் செயலிழந்துள்ளது. ஏறாவூர் பரிவர்த்தனை உபநிலையத்தி


தியாக தீபம்
அன்னை பூபதிக்கு
திவக மக்கள் சார்பில்
எமது இதய அஞ்சலிகள்



அம்பாள் ரேடர்ஸ்
வங்களாவடி - வேலணை.
R/53


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

02 - 04 - 87 அன்று மயிலியதனை ஸ்ரீலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் போது காயமடைந்து பின் வல்லையில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் மரணம் அடைந்த வீர வேங்கை



**கப்டன் முரளி (கந்தசாமித்துரை ஸ்ரீகரன்)**

ஜனனம்: 10 - 05 - 1961 வீரமரணம்: 02 - 04 - 1987

ஒரு புலர் காலைப் பொழுதில்
புதிய விடிவை அமைக்க
புறப்பட்டவன்
புதிய அத்தியாயம் படைத்து விட்டான்
இளஞ்சூரிய நிற உதிரத்தால்
இந்த மண்ணில்
புதிய அத்தியாயம்
படைத்து விட்டான்
- இந்த மண்ணின் மைந்தன்

குடும்பத்தினர், நண்பர்கள்
வேம்படி ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

B/512


யாழ்நகரில்
இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10·30 4.40 4.45 7.00
THE COUNTESS DIEDOFLAUGHTER
(Adults Only)

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

லிடோ (யாழ்)
75வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

128வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
102 நாள் வெற்றிநடை போடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)



விண்ணப்பிக்கவும்

வட- கிழக்கின் பின்தங்கியகிராமங்களில் கல்வி வழங்க......
ஆரம்ப — நடுத்தர வகுப்புகளுக்கான ஆசிரியர்கள் தேவை

(அ) தகுதிகள்:- G. C. E. சாதாரண தரம் அல்லது
அதற்கு மேலானது. (தொண்டர் ஆசிரியர்களாக இருந்தவர்கள் விரும்பத்தக்கது)
(ஆ) திருமணம் செய்யாதவராகவும் 20 - 25 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு: ஊதியத்துடன் தங்குமிடவசதி மற்றும் போக்குவரத்துவசதி செய்து தரப்படும்
முடிவு திகதி. 10- 04- 1990

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி



தமிழீழ மண்ணின் மணித்துளியாக
மாதர் தலைவியாகி மரணித்த - அன்னையே
வாழ்க உன்
தியாக வரலாறு

முருகன் காட்வெயர்ஸ்



வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

கல்வியாண்டு 1990/91
பேராதனைப் பல்கலைக்கழக
வெளிவாரி மாணவர்களுக்கான விரிவுரைகள்

★ கலைமாணி B. A.
★ விஞ்ஞானமாணி B. Sc. (புள்ளிவிபரவியல்)
க. பொ. த. உயாதரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சிநெறியை மேற்கொள்ளலாம்.

புதிய பிரிவு விரிவுரைகள் 1-04-1990 இல் ஆரம்பமாகின்றன.

★ இதுவரை பதிவுசெய்யத் தவறிய மாணவர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பகுதிக்கான தொலைபேசி சேவை மீண்டும் செயலிழந்துள்ளது. ஏறாவூர் பரிவர்த்தனை உபநிலையத்திலுள்ள கருவியொன்று பழுதடைந்த நிலையிலிருப்பதால் தொலைபேசி துண்டிக்கப்பட்டுள்ளது. ஓரிருவாரங்களின் பின்பு வழமைக்கு திரும்பும் என தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலைய அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

முடிவு திகதி. 10- 04- 1990

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி

தலைமை செயலகம் விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னனி
தருமபுரம்
கிளிநொச்சி

B/511

முருகன் காட்வெயர்ஸ்
கண்டி வீதி,
சாவகச்சேரி.

(B / 513)

புதிய பிரிவு விரிவுரைகள் 1-04-1990 இல் ஆரம்பமாகின்றன.

* இதுவரை பதிவுசெய்யத் தவறிய மாணவர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

உதவிப் பதிவாளர்
பட்டப் படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

R.56

சாவகச்சேரி தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்

அங்கத்தவர்களும், ஊழியர்களும்




# அன்னை பூபதியின் நினைவஞ்சலி

என்றும் எம்நெஞ்சில் நீங்கா நினைவலையாய் நிலைத்திருப்பாய்

தியாக அன்னையின் தியாக தீபம் என்றும் அணையாது

B/59

### லித்வேனியாவை

# சுதந்திரப்பிரகடனத்தை கைவிடுமாறு

# கோர்பசேவ் மீண்டும் கேட்கிறார்



# மொஸ்கோவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(மொஸ்கோ)

**லித்வேனிய குடியரசின் சுதந்திர பிரகடனத்தை ரத்துச்செய்யுமாறு அக் குடியரசின் பாராளுமன்றத்தை சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் கேட்டுள்ளார்.**

எல்லாப் பிரச்சினைகளையும் சோவியத் அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு பேச்சு நடத்தவும் அவர் முன்வந்திருக்கிறார். இதற்கு இருவாரங்களுக்கு முன்பாக தாம் எந்தக் குடியரசுடனும் பேச்சு வார்த்தை நடத்த தயாரில்லை என குறிப்பிட்டது இங்கு கவனிக்கத்தக்கது.

சோவியத் யூனியனில் இருந்துபிரிந்து செல்வதுஎன்று லித்வேனியத் தலைமை பேற்கொண்டமுடிவால் லித்வேனிய மக்கள் அனைவரினதும் பாதுகாப்புக்கும், இயல்பான வாழ்க்கைக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று கொர்பச்சேவ் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தகைய ஒரு தரப்பான நடவடிக்கைகள் சோவியத் அரசியல்சாசனத்திற்கு எதிரானவை என்று கூறிய அவர் தங்கள் மக்களின் நலன்களைக் காக்குமாறு லித்வேனிய தலைவர்களை வற்புறுத்துகிறார்.

இதற்கிடையில் லித்வேனிய தலைநகரில் மேலும் சோவியத் படைகள் பல அரசாங்க கட்டிடங்களில் நுழைந்திருக்கின்றன. அத்துடன் பெரும்பாலான செய்தித்தாள்கள் பிரசுரமாகும் அச்சுக்கூடமும் இவற்றில் ஒன்றாகும். ஆயினும் செய்தித்தாள்கள் எதுவித தடையுமின்றி வழமைபோல் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந் நடவடிக்கைகளை எதிர்த்து மொஸ்கோவில்இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இவ் ஊர்வலத்தை பொது மக்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் ஒழுங்கு படுத்தினார்கள். பேச்சு வார்த்தை மூலம் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் என்ற கருத்துமுன் வைக்கப்பட்டது.

இக் கூட்டத்தின் முடிவில் சோவியத் குடியரசின் உறுப்பினர்களும் பல தலைவர்களும் உரையாற்றினார்கள் அதில் சோவியத் அரசாங்கம் இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்த வேண்டும் எனக் கூறப்பட்டது.

## புலிகளின் பலத்தைத் தவறாக கணிப்பிட்டதாக றோ மீது கண்டனம்

(புதுடில்லி)

தமிழ்த்தீவிரவாதிகளின் பலத்தை குறைவாக மதிப்பிட்டுள்ளதாக இந்திய புலனாய்வுத்துறை அதிகாரிகளை (றோ) இலங்கையிலிருந்த இந்திய இராணுவத்தின் தளபதி லெப்டினற் ஜெனரல் கல்கத் கண்டித்துள்ளார்.

இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இந்திய இராணுவம் இனிமேலும் தலையிடமாட்டாது எனவும் ஜெனரல் கல்கத் கூறினார்.

இந்திய இராணுவப்பணி பூர்த்தியாகியுள்ளது எனக் குறிப்பிட்ட அவர் அரசியல் சார்புடைய பிரச்சினைகளில் இராணுவத்துக்கு எதுவித சம்பந்தமும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் புதுடில்லி வந்த இந்தியப்படையினரை வரவேற்றுப் பேசிய பிரதமர் வி. பி. சிங், இலங்கையில் சிறுபான்மைத் தமிழ்மக்களின் பாதுகாப்புக்கு இலங்கை அரசு உத்தரவாதம் அளித்து உள்ளது என் குறிப்பிட்டார்.

## சில மினிபஸ்களில் சென்றால் இடைவழியில் நிற்க வேண்டும்

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாண குடாநாட்டில் சேவையிலீடுபடும் சில மினிபஸ்கள் இடைவழியில் நின்றுவிடுகின்றன. இதற்கு அந்த மினிபஸ்கள் போதியளவு எரிபொருளை நிரப்பாததே காரணம் என பொது மக்கள் கூறுகின்றனர்.

மிக அவசிய தேவைகளுக்காக இந்த மினிபஸ்களில் பயணம் செய்தால் வழியில் மினிபஸ் நின்றுவிடுவதாக பயணி ஒருவர் ஈழநாதம் நிருபரிடம் கூறினார்.

இதேவேளை சில மினிபஸ்கள் அதிக சட்டணம் அறவிடுவதாகவும் பொதுமக்கள் புகார்கள் தெரிவிக்கின்றனர்.

சில மினிபஸ்களில் புதியவர் ஒருவர் பயணம் செய்யும் போது அவர் செல்லும் இடத்தையும் பயணக்கட்டணத்தையும் நடத்துனரிடம் கேட்டால் அதிகமாகவே அவர் கட்டணம் அறவிடுகின்றார்.

சில மினிபஸ்கள் மிகச்சிறியதாக இருப்பதுடன் கதவுகள், யன்னல்கள் இன்றி சேவையிலீடுபடுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அமெரிக்க மாநிலத்தில் கருச்சிதைவுப் பிரச்சினை

(வாஷிங்டன்)

ஐயோவோ மாநிலத்தில் கருச்சிதைவு செய்வதைத் தடைசெய்யும் மசோதாவுக்கு மாநில ஆளுநர் கைச்சாத்திட்டு அங்கீகாரம் வழங்கும் பட்சத்தில், அங்கு உற்பத்தியாகும் உருளைக்கிழங்கை நுகராமல் பகிஷ்கரிக்கப்போவதாகவும், இயற்கையான கிராமியச் சூழலில் அமைந்துள்ள இந்த மற்று மாநிலத்துக்கு உல்லாசப் பிரயாணிகள் செல்லாமல் தாம் முட்டுக்கட்டை போடப் போவதாகவும் அமெரிக்காவில் கருச்சிதைவு செய்து கொள்வதற்கு ஆதரவானோர் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்க சமஷ்டி மாநிலங்களில் அமுலில் இருக்கும் கருச்சிதைவுச் சட்டங்களை விட மிகக் கெடுபிடியான சட்டம் என வர்ணிக்கப்படும் இச்சட்டம், ஏற்கனவே ஐயோவா சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் அங்கீகாரத்துக்காகக் காத்திருக்கிறதாம், இச்சட்டம் நடைமுறைக்கு வந்தால் கருச்சிதைவைச் செய்யும் வைத்தியர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்களாம்.

ஐயோவோ மாநிலத்தின் ஆளுநர் சிசில் அன்றூஸ் முன்நாள் உள்துறைச் செயலாளர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரும் இம்மசோதாவுக்குக் கைச்சாத்திடுவதா அல்லது தனது விற்ரோ அதிகாரத்தைப் பாவிப்பதா என இருமனப்பட்ட நிலையில் உள்ளார். வார இறுதியில் ஆளுநர் தமது முடிவை வெளியிடுவார் எனக் கருதப்படுகிறது.

ஆளுநர் அன்றூஸ் இந்தச் சட்டத்தை தடை செய்யாவிட்டால், ஐயோவில் பெண்கள் சட்டவிரோதமான முறையில் கருச்சிதைவு செய்து கொள்வார்கள் என பெண்களுக்கான தேசிய அமைப்பின் தலைவர் மொளி யார்ட் தெரிவித்தார்.

ஐயோவா மாநிலத்தில் முக்கிய விளைபொருள்களில் ஒன்றான உருளைக்கிழங்கிலிருந்து வருடமொன்றுக்கு 13 லட்சம் டொலர் இம்மாநிலத்துக்கு வருமானம் கிடைக்கிறது. மசோதா சட்டமானால் உருளைக்கிழங்கு பகிஷ்கரிப்பு நடவடிக்கையினால் மாநிலத்தின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் என்று வியாபாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## முதலமைச்சர் சென்ற விமானம் தரையிறங்கியது

(புதுடில்லி)

மத்திய பிரதேச முதலமைச்சர் திரு. சுந்தரலால் பட்வால் நேற்றுக்காலையில் பிரயாணம் செய்து கொண்டிருந்த விமானம், அது புறப்பட்ட பன்னிரண்டு நிமிடங்களுக்குள் மின்சாரக் கோளாறு காரணமாக பைராகா விமான நிலையம் அருகே அவசரமாக தரையிறங்க வேண்டியிருந்தது.

முதலமைச்சர் அதிஷ்டவசமாக உயிர் தப்பினார். அந்த விமானத்திலிருந்த அனைவரும் காயம் எதுவுமின்றி உயிர் தப்பினர். திரு. சுந்திரலால் பட்வால் வேறுசில அதிகாரிகளுடன் வாரணாசிக்.குச்சென்றுகொண்டிருந்தார்

# புதிய வரியை எதிர்த்து பிரிட்டனில் ஆர்ப்பாட்டம்

## பொலிசாரும் மக்களும் காயம்; பலர் கைது; ஆட்சிக்கு நெருக்கடி!

(லண்டன்)

பிரித்தானியா அரசாங்கத்தின் புதிய வரி விதிப்பு திட்டத்தை எதிர்த்து மத்திய லண்டனில் பெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இவ் ஆர்ப்பாட்டத்தில் 120 பேருக்கும் அதிகமானோர் சாயமடைந்தனர். இதில் அரைவாசிக்கும் அதிகமானோர் பொலிசாரே ஆவர் 300க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளன[illegible]

இவ் [illegible] விதிப்பானது நேற்றில் இருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. பிளாஸ்ரோ நகரிலும் 25,000 க்கு அதிகமான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இப்பிரச்சினையால் மாக்கிரட் தட்சரின் அரசாங்கம் உறுதி குலைந்துள்ளது என்று



## கடதாசி கூட்டுத்தாபனம் வைக்கோல் கொள்வனவு!

(மட்டக்களப்பு)

தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தின் வாழைச்சேனை

கடந்த வருடம் பெரும் போக வேளாண்மை அறுவடையில் 6700 மெற்றிக்தொன்

## மரமுந்திரிகைக் கன்றுகள் நன்கொடை

(பண்டத்தரிப்பு)

மரமுந்திரிகைச் செய்கையை யாழ்ப்பாணத்தில் [illegible]

கொள்ளலாம்.

சடந்தாண்டு பலர் செய்கை பண்ண விருப்பியும் உரிய

## போக்குவரத்து ஒழுங்கு

(மட்டக்களப்பு)

தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தின் வாழைச்சேனை ஆலையினால் பெரும்போக வேளாண்மை அறுவடையின் பின்பு வைக்கோல் கொள்வனவு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, மாவட்டத்தில் வாழைச்சேனை, கொடுவாமடு, தும்பன்கேணி ஆகிய இடங்களிலும்.

அம்பாறை மாவட்டத்தில் ஒலுவில், சம்மாந்துறை, அக்கரைப்பற்று, நாவிதன்வெளி, அம்பாறை ஆகிய எட்டுசொள்வனவு நிலையங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து வைக்கோல் கொள்வனவு செய்யப்படுகின்றது.

கடந்த வருடம் பெரும்போக வேளாண்மை அறுவடையில் 6700 மெற்றிக்தொன் வைக்கோல் கொள்வனவு செய்யப்பட்டது.

இவ்வருடம் அமைதியான சூழ்நிலை காரணமாக 7000 மெற்றிக்தொன் பெரும்போக வேளாண்மை அறுவடையில் கொள்வனவு செய்யதிட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 4000 மெற்றிக்தொன் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக ஆலைகொள்வனவு முகாமையாளர் திரு. எச். எம். இராஜேந்திரம் தெரிவித்தார்.

ஒரு மெற்றிக்தொன் விலை ரூபா 200. (37)

மரமுந்திரிகைச் செய்கையை யாழ்ப்பாணத்தில் ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் இவ்வருடமும் மரமுந்திரிகைக் கன்றுகளை விநியோகிக்க யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சடந்தாண்டு 10,000 மரமுந்திரிகைக்கன்றுகள்செய்கையாளர்கட்கு விநியோகிக்கப்பட்டன.

இவ்வாண்டும் மரமுந்திரிகை செய்கை பண்ண விரும்புவோருக்கு யாழ் மாவட்டத்தில் இயங்கும் 12சமநலசேவை நிலையங்களுக்கூடாக கன்றுகள் விநியோகிக்க கமநல யாழ் மாவட்ட ஆணையாளர் திரு பரமலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

செய்கை பண்ண விரும்புவோர் தமது தேவைகள் சமநல சேவை நிலையங்களிலுள்ள பெரும்பாக அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தேவைகளை ஏலவே தெரிவிப்பதன் மூலம் ஏமாற்றத்தை தவிர்த்துக்

சடந்தாண்டு பலர் செய்கை பண்ண விருப்பியும் உரிய காலத்தில் தொடர்பு கொள்ளாமையால் கன்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

தரிசு நிலங்களிலும், தென்னை, பனைகளுக்கு இடையில் ஊடுபயிராக நட்டு அதிக வருவாய் தரக்கூடியது மரமுந்திரிகை.

## தமிழ்த்தின போட்டிமுடிவுகள்

(பூநகரி)

பூநகரி கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையேயான தமிழ்த்தினவிழா பூநகரி மகா வித்தியாலயத்தில் பிரதிகொத்தணி அதிபர் திரு. எஸ். வைரவநாதன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட கல்வித் திணைக்கள அதிகாரி பொன். சபாபதி கலந்துகொண்டார்.



அரசியல் அதிகாரிகள் கூறுகின்றனர். பிரதம மந்திரி மார்க்கிரட் தட்சர் பதவி விலகலாம் என்று கருதப்பட்ட போதும் பதவி விலகல் திட்டம் எதுவும் இல்லை என்று மார்க்கிரட் தட்சர் உறுதிபடக் கூறியிருக்கிறார்.

# போக்குவரத்து ஒழுங்கு படுத்தப்பட வேண்டும்

(சுதுமலை)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய திருவிழா தற்போது நடைபெற்று வருகின்றது.

இந்த ஆலயத்திற்கு திருவிழாக் காலங்களில் சென்று வரும் பக்தர்களுக்கு பிரதான பாதையில் வேகமாகச் செல்லும் மினிபஸ் போன்ற வாகனங்கள் ஆபத்தை உண்டு பண்ணும் ஒரு சூழல் உள்ளதாக பொது மக்கள் ஈழநாதத்திற்கு அறியத்தந்துள்ளார்கள்.

பொதுமக்கள் நன்மை கருதி கோவில் சுற்றாடலில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பொதுஸ்தாபன தொண்டர்கள் இந்த வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தி பக்தர்களுக்கு இடையூறு இல்லாத வகையில் ஒழுங்குகளைக் கவனிப்பார்களா என்று பொது மக்கள் கேட்கிறார்கள் (19)

# மாகாண மாவட்ட ரீதியில் ஆசிரியர்கள் இடமாற்றசபை

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஆசிரியர் இடமாற்ற சபைகளை மாகாண, மாவட்டரீதியில் ஆரம்பித்துள்ளது. இச் சபை மூலம் இனிமேல் ஆசிரியர் இடமாற்றம் மேற்கொள்ளப்படும்.

மேற்கண்டவாறு வட-கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சின் புதிய செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராஜா நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

இடமாற்ற சபை அமைக்கப்படும் வரை இடமாற்றங்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. தாபனக் கோவையின் பிரகாரம் இடமாற்ற சபையில், தொழிற் சங்கங்கள் சார்பில் ஒரு பிரதிநிதி இடம் பெறுவார். ஆனால் 15 சதவீதத்திற்கு கூடுதலான அங்கத்தவர்களைக்கொண்ட தொழிற் சங்கங்கள்தான் அங்கம் பெற முடியும்.

மாகாண இடமாற்ற சபையின் செயலாளர் (தலைவர்( சிரேஷ்ட கல்விப் பணிப்பாளர், (செயலாளர்) பிரதிக் கல்விப் பணிப்பாளர், தொழிற்சங்கப் பிரதிநிதிகள்.

மாவட்ட இடமாற்ற சபையில், தலைவராக மாவட்ட கல்விப் பணிப்பாளர், உறுப்பினர்களாக பிரதம கல்வி அதிகாரி (நிர்வாகம்), கோட்டக் கல்வி அதிகாரிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றப் பட்டியலில் இடம் பெறாதவர்களின் மேன் முறையீடுகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. தகுதியானவர்களுக்கு அடுத்த மாதம் முதல் இடமாற்றம் வழங்கப்படும்.

கிராமப்புற பாடசாலைகளுக்கு சிரேஷ்ட ஆசிரியர்களின் சேவை தேவைப்படுவதால் ஒன்று அல்லது இரண்டு வருடகாலம சிரேஷ்ட ஆசிரியர்கள் அப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மேற்படி காலம் முடிந்த பின்பு மீண்டும் பழைய பாடசாலையில் நியமிக்கப்படுவார் என்றார். (37)

# பாடசாலை வளர்ச்சிக்கு யார் பொறுப்பு?

(சுழிபுரம்)

பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றோரும், நலன் விரும்பிகளும் அதிபர், ஆசிரியர்களுடன் நெருங்கி நின்று பணியாற்ற வேண்டும். தூரத்தில் நின்று விமர்சிக்கும் நிலையை மாற்றி எமது பாடசாலை, எமது மக்கள் என்று பரந்த நோக்கில் கண்ணோட்டம் செலுத்த வேண்டும். ஆக்க பூர்வமான கருத்துக்களைக் கூறி அவை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பங்களிப்பையும் வழங்கினால் பாடசாலைகள் ஒவ்வொன்றும் உன்னத நிலையை அடைய முடியும். கிராமப்புறப் பாடசாலைகளின் கல்வித் தரத்தை நகரப்புறப் பாடசாலைகளின் தரத்திற்குச் சமனாக உயர்த்த கல்வி அதிகாரிகளுக்கு வேண்டுதல்கள் வழங்கும் பொறுப்பில் பெற்றோர்களும் தங்கள் பங்கை செலுத்தினால் தூர இடங்களிலுள்ள பாடசாலைகளுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்ப வேண்டிய அவசியம் நேராது.

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு. செ. பத்மநாதன் குறிப்பிட்டார். பெருந்தொகையான பெற்றோர் நலன்விரும்பிகள் திரண்டு வந்திருந்து பாடசாலை தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து இக்கூட்டத்தில் அதிபருடன் கலந்துரையாடினார்கள். (7( (

# கொழும்பில் இலக்கிய ஆய்வரங்கு

(கொழும்பு)

1970-க்குப் பின்னர் இலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பில் இடம்பெற்ற கலை இலக்கியச் சர்ச்சைகள் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் திருமதி சித்ரலேகா மௌனகுரு இன்று சனிக்கிழமை கொழும்பு வெக்சோல் வீதியிலுள்ள றக்ஷண மந்திரய மண்டபத்தில் உரையாற்றுவார்.

மேற்படி ஆய்வரங்கை இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

அமைச்சர் திரு. பி.பி. தேவராஜ் ஆய்வரங்கிற்கு தலைமை வகிப்பார். இதற்கான ஏற்பாடுகளை அமைச்சின் செயலாளர் திரு. எம். ஸி. மாணிக்கவாசகர் செய்துள்ளார். (27)


## மக்கள் வங்கி

அடகு நகைகள் மீளளித்தல்

முல்லைத்தீவு மாவட்டம்

06. 12. 83 வரை முல்லைத்தீவுக் கிளையில் அடைவு வைத்து அவற்றை மீளப் பெறுவதற்காக 21. 09. 89 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் அமைந்துள்ள போக்கு வரத்துச் சபை டிப்போ கட்டிடத்தில் இயங்கும் பொலிஸ் நிலையத்தில்வைத்து பின்வரும் திகதிகளில் காலை 8 .30 மணி முதல் பி. ப 1.00 மணி வரை மீளளிக்கப்படும்.

| வழங்கும் திகதி | கிழமை |
|---|---|
| 04. 04. 90 | புதன் |
| 05. 04. 90 | வியாழன் |
| 06. 04. 90 | வெள்ளி |

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை பணம் கட்டியதற்கான வங்கி இரசீது, வங்கியால் அனுப்பப்பட்ட கடிதம் ஆகியவற்றுடன் சமூகந் தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

முல்லைத்தீவுக் கிளையில் 06. 12. 83க்குப் பின்னர் அடைவு வைத்து 21. 09. 89 வரை மீளப் பெறுவதற்காக பணம் கட்டியவர்களினதும். மாங்குளம் கிளையில் அடைவு வைத்தவர்களினதும் நகைகள் இரண்டாம் கட்டமாக விரைவில் வழங்கப்படும்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

B/534

அன்னை பூபதியின் நினைவாக

எமது

# இதயம் கனிந்த நினைவு அஞ்சலிகள்

யாழ்ப்பாணம்
திரைப் படம்



திரையிடுவோர்
சங்கம்

இல. 11, இராமையாச் செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

- நியூ சாந்தி யாழ்ப்பாணம்
- ஹரன் ”
- மனோகரா ”
- வின்ஸர் ”
- வெலிங்டன் ”
- லிடோ யாழ்ப்பாணம்
- ஸ்ரீதர் ”
- ராஜா ”
- ராணி ”

B/510

இருபாலை வர்த்தகர்களின் சார்பில்

# இருபாலை வர்த்தகர்களின் சார்பில்

# எமது அஞ்சலிகள்

பாரதம் காட்டிய அஹிம்சை வழியில் நின்று தமிழ் பேசும் மக்களின்
சுதந்திர விடுதலைக்காகவும், தமிழ் மண்ணைக் காக்கவும் அன்னை
யர் முன்னணியுடன் இணைந்து தன்னையே அழித்துக் கொண்ட
தியாக அன்னை பூபதியை நினைவு கூருகின்றோம். தியாக
வரலாற்றில் சரித்திரம் படைத்த அன்னையே நீர் விட்டுச்
சென்ற சுவடுகள் எங்களைவிட்டு மறையவில்லை. நாம்
மீண்டும் எண்ணிப் பார்க்கின்றோம். தமிழ் மக்கள்
சுதந்திரத்துடன் வாழ திடசங்கற்பம் கொள்வோம்.
ஓ! மட்டக்களப்பின் மாசற்ற அன்னையே!
ஓராண்டல்ல, ஓராயிரம் ஆண்டுகளானாலும்
மறந்திடுவோமோ உன்மாபெரும் தியாகத்தை!
உமது ஆத்மா சாந்தியடைக!

## சிந்தனைக்கு

நீங்கள் மட்டு மனிதர்களோவிது
நீதமோ ? - பிடி – வாதமோ ?

[redacted]

— பாரதியார்


# ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 02 - 04 - 90


## அங்கே போயும் அமைதியில்லை

'அமைதிப்படை' என்ற பெயரில் இலங்கைக்கு வந்து இரண்டரை வருடங்கள் தங்கியிருந்து நாடு திரும்பிய பின்னர் அந்தப்படைக்கு அமைதியில்லை, இந்திய அரசுக்கும் மாநில அரசுக்கும்கூட அமைதியில்லை!

இந்தப் படையினர் டில்லி செல்லும் வழியில் தமிழ் நாட்டின் தலைநகர் சென்னையில் போய் இறங்கினர்.

இவர்களுக்கு சென்னைப்பட்டினத்தில் "வீர வரவேற்பு" அளிக்கப்பட்டது. இந்த வைபவத்தில் தமிழக முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான கலைஞர் மு. கருணாநிதி கலந்து கொள்ளவில்லை.

இந்த வரவேற்பைப் பகிஷ்கரித்ததன் மூலம் பண்பாட்டை முதல்வர் மீறிவிட்டார் என்று இந்திரா காங்கிரசின் தமிழ் நாடு துணைத் தலைவர் குமரி ஆனந்தன் குற்றம் சாட்டினார்.

இலங்கையில் ஐயாயிரம் தமிழ் மக்களைக் கொன்று குவித்த அமைதிப்படையினருக்கு அளித்த வரவேற்பில் கலந்துகொள்ள மனச்சாட்சி இடம் தரவில்லை என்று கலைஞர் கருணாநிதி பதிலளித்திருந்தார்.

ஆனாலும் தமிழக சட்டசபையில் இரண்டு தினங்களாக தமிழக சட்டசபையில் கூச்சல் குழப்பங்களும் வெளிநடப்புக்களும் வெளியேற்றங்களும் தொடர்ந்து நடைபெற்றிருக்கின்றன.

இச்சம்பவங்கள் தமிழ்நாடு சட்டசபைக்கு ஒன்றும் புதிதல்ல. "முந்தானையைப் பிடித்து இழுத்தார்" என்றுகூட இதே சட்டசபையில் குரல் எழுந்திருக்கிறது. அடிபிடி சண்டை நடந்து அமைச்சர் சிலர் ஆஸ்பத்திரியில் கூட அனுமதிக்கப்பட்டிருந்த சம்பவங்களுமுண்டு.

டில்லியில் ராஜசபையிலும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம். பி. அமைதிப்படை பற்றிய பிரச்சனையைக் கிளப்பினார்.

# இந்தியப் படையின் யாழ்ப்பாண யுத்தம்

1987 ஜூலை மாதம் இந்திய போக்கு வரத்து விமானங்கள் பாக்குநீரிணையைக் கடந்து, பலாலியில் தரையிறங்கியது. இவ் விமானத்தில் இந்திய அமைதிப் படையினர் வந்திறங்கியதோடு இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் படை பலத்தால் தமது செல்வாக்கை விஸ்தரிக்க விரும்பிய இந்தியாவின் நோக்கம் சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவாகியது. ஒரு சிறிய நாடாகிய இலங்கையில் இந்தியா திடீரெனத் தனது படைகளை இறக்கியமை உலக நாடுகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதோடு, இந்த சர்வதேச இராட்சதனை உலக நாடுகள் வேறு பாதிரியாகப் பார்க்கத் தொடங்கினர்.

### இந்தியப் படையின் தோல்வியும் வெற்றியும்

இலங்கையில் இந்தியப் படைகள் இருந்த இடைப்பட்ட காலத்தில் பல தோல்விகளையும் வெற்றிகளையும் சந்தித்தது. ஜவான்களையும் ஆயுதங்களையும் இழந்தது. புதிய பரிசோதனைகளையும் தந்திரோபாயங்களையும் இந்திய இராணுவம் கையாண்டது. இலங்கையில் இந்தியப் படைபெற்ற அனுபவம் உள்ளூரில் கிளர்ச்சிகளை அடக்கவும், அயல் நாடுகளை சட்டுப்படுத்தவும் உதவலாம். ஆனால் இலங்கையில் இந்தியப் படையினர் புலிகளிடம் இராணுவரீதியாகத் தோல்வி கண்டது. சில அனுகூலங்களையும் தந்துள்ளது.

1987 ஒக்டோபரில் இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளிலிருந்து பயனுள்ள அனுபவத்தைப் பெற்றது. இந்திய ஜவான்கள் வந்ததும் ஓரிரு வாரங்கள் சமாதானம் நிலவியது. ஆனால் 14 விடுதலைப் புலிகள் கடலில் கைதாகியும், அவர்களைக் கொழும்புக்கு விசாரணைக்குக் கொண்டு செல்ல ஏற்பாடாகியதும், புலிகள் நஞ்சருந்தி உயிர் விட்டதுடன், புலிகளின் சீற்றம் இந்திய ஜவான்கள் பக்கம் திரும்பியது. இந்திய இராணுவம் புலிகளுக்கு எதிராக வியூகம் வகுத்தது.

யுத்த தந்திரோபாயங்களை நெறிப்படுத்துவதற்காகவும், கணக்கெடுப்பதற்காவும் இந்தியாவின் புகழ்பெற்ற தளபதி ஜெனரல் கிருஷ்ணசுவாமி சுந்தர் (சுந்தர்ஜி)ரும், தென் பிராந்திய தளபதியான ஜெனரல் திபேந்திர சிங்கும் இலங்கைக்கு வந்தனர். இந்திய அமைதிப்படை தலைமைப் பீட அமைப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. மேலதிகமாக ஜவான்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டனர். ஆகட்ஸ் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் 3,000 பேரைக் கொண்ட இராணுவம், 15,000 பேராகப் பருத்தது.

### இரண்டு வாரங்களில் 160 பேர் மரணம்

ஒப்பரேஷன் பாவான் என்று பெயரிடப்பட்ட யாழ்ப்பாணப் படையெடுப்பு ஒக்ரோபர் 10, 1987 இல் ஆரம்பமாகியது. யாழ்ப்பாணத்தை நோக்கி இந்திய அமைதிப் படை மூன்று பிரதான வழிகளால் நகர்ந்தது. 54 - வது விமானத் தாக்குதல் பிரிவு யாழ்நகரத்தை நோக்கி நத்தை வேகத்தில் முன்னேற வேண்டியதாயிற்று. காரணம் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களையும், கண்ணிவெடிகளையும் இந்திய ஜவான்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. முதல் இரண்டுவாரத்தில் மாத்திரம் இந்தியப்படை 22 இராணுவ அதிகாரிகள் உட்பட 160 பேரை இழந்தது. 550ஜவான்கள் காயமுற்றனர். இந்தியப் படையின் யாழ்ப்பாண முன்னேற்றத்தை இலகுபடுத்தும் வகையில் இந்திய விமானப் படை ஆகாயத் தாக்குதல்களை மேற்கொண்டது.

### சுந்தர்ஜி கண்டனத்துக்கு ஆளானார்

திறமைசாலி என்றும் புதிய இராணுவ உத்திகளைக் கையாளக்கூடியவர் என்று போற்றப்பட்ட சுந்தர்ஜி, யாழ்ப்பாண யுத்தத்தின் போது அவர் கையாண்ட மரபுரீதியான இராணுவ நடவடிக்கைகளினால் கண்டனங்களுக்கு ஆளானார்கள். தொடர்ச்சியான முற்றுகை, தாக்குதல், வடமராட்சி இராணுவ நடவடிக்கைகளின் மத்தியிலும் விடுதலைப் புலிகள் வெற்றிகரமாகப் பின்னொங்கி, வாவிகள் வழியாக வெளியேறி வன்னிக்காடுகளில் புகலிடம் தேடியதை இந்திய ஜவான்களால் தடுக்க முடியவில்லை.

1987, நெவம்பர் மாதத்தில் யுத்தம் வன்னிக்கும், கிழக்கிலங்கைக்கும் பரவியது. (றோகன் குணசேகராவின் கட்டுரையின் ஒரு பகுதி. நன்றி ஐலண்ட்)

## சிங்கள பயிலுநர் ஆசிரியர் நியமனம்

(மட்டக்களப்பு)

தமிழ்மொழி மூல பாடசாலைகளில் தமிழில் கற்பிக்க முடியும் என்ற ஒப்புதல் பெறப்பட்ட, பத்து சிங்கள ஆசிரியர் பயிலுநர்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நியமனம் பெற்றுள்ளனர்.

இம் மாவட்டத்தில் சிங்கள பாடசாலைகள் இயங்குவதில்லை. இந்நிலையில் மேற்படி நிபந்தனையுடன் நியமனம் பெற்றுள்ளதாக கல்வி இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார். (37)

## மக்கள் மடல்

## மீண்டும் சாய்ப்புச் சட்டம் அமுலுக்கு வருமா?

கடந்த காலங்களில் வட பகுதியில் யாழ் மாவட்டம், வவுனியா மாவட்டம், மன்னார் மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் சாய்ப்புச் சட்டம் அமுலில் இருந்ததால் கடைச் சிப்பந்திகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு ஊழியரின் வேலை நேரம் 8 மணித்தியாலம், வாரத்தில் 1 1/2 நாள் விடுமுறை, வர்த்தக விடுமுறை தினங்களில் விடுமுறை ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது இதனால ஊழியருக்கு சற்று ஓய்வாக இருந்தது. தற்பொழுது கடைகள் காலை 6 மணிக்கு திறந்து இரவு 8 மணிக்கு மூடப்படுகின்றன. வாரத்தில் ஒருநாள் மட்டும் லீவு, வர்த்தக விடுமுறை தினங்களில் கடைகள திறக்கப்படுகின்றது. கடைகளில் கடமை புரியும் ஊழியர்களும் மனிதர்கள்தானே. அவர்கள் இயந்திரம் அல்லவே, அவர்களுக்கு ஓய்வு தேவை இல்லையா? ஒரு ஊழியன் 12 மணித்தியாலம் இடைவிடாது வேலை செய்தால், அவன் உடல் என்ன ஆகும்? அவனுக்கு மனைவி மக்கள் கிடையாதா? சற்று முதலாளிமார்கள் சிந்திக்க வேண்டும். சகலரும் ஒரே நேரத்தில் கடைகளைத் திறந்து ஒரே நேரத்தில் மூடினால் மக்களும் அதற்கேற்றவாறு பழகிக்கொள்வார்கள்.

ஊழியர்களுக்கும் ஓரளவு லீவு கிடைத்தமாதிரி இருக்கும். சகல கடைகளும் காலை எட்டு மணிக்கு திறந்து மாலை ஐந்து மணிக்கு மூடினால் எட்டு மணித்தியால வேலையோடு ஊழியர்களுக்கு சற்று ஓய்வாக இருக்கும் அல்லவா?

ஆகவே தொழிலாளர் நலன்பேணி பாதுகாக்கப்படுவதில் அக்கறை உள்ளவர்கள் கரிசனை எடுத்து வர்த்தக ஊழியர்கள் வாழ்வில் மீண்டும் ஒளிவீச தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என திடமாக நம்புகிறேன்.

நன்றி
மு. க. சுமவேந்தன்

## மேலும் ஐந்து குடும்பங்களுக்கு மரணத்தின்பின் நன்கொடை

(யாழ்ப்பாணம்)

விவசாய ஓய்வூதியதிட்டத்தின் கீழ் வன்செயலினால் இறந்த மேலும் ஐந்து குடும்பங்களுக்கு யாழ் மாவட்டத்தில் மரணத்தின் பின் நன்கொடை வழங்ப்பட உள்ளது. அவர்கள் விபரம் வருமாறு: இ. கந்தவேள் அச்சுவேலி இவருக்குக் கிடைக்க இருக்கும் தொகை 15,220ரூபா க. வேல்முருகன் அச்சுவேலி இவர் 10,285 ரூபா பெறுவார். மேலும் இ. பிரபாகரன் இணுவில் 25,105 ரூபாவும் க. நமசிவாயம் தாளையடி 25,105 ரூபாவும் க. ரவீந்திரராசா புலோலி 20, 095 ரூபாவும் மரண நன்கொடையாகபெற உள்ளனர்.

இத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் மொத்தமாக 2297 குடும்பங்கள் சேர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

## கழுவாஞ்சிக்குடி களுதாவளையிலும் அன்னைக்கு அஞ்சலி

(கல்லாறு)

களுவாஞ்சிக்குடி பழைய உதவி அரசாங்க அதிபர் அலுவலக முன்றலில் அன்னை பூபதியின் இரண்டாவது நினைவு தினத்தை முன்னிட்டு அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் கணிசமான அளவு பாடசாலை மாணவ மாணவியரும் பங்கு கொண்டனர்.

களுவாஞ்சிக்குடி தேற்றாதீவு களுதாவளை பகுதிகள் குருத்தோலைகளாலும், கறுப்பு, வெள்ளைக் கொடிகளாலும்முழுமையாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அன்னை பூபதியின் படமும் ஆங்காங்கே காணப்பட்டது. (45)

## சட்டவிரோத மின்சாரம் பெற்ற 5 ஆலைகள் கண்டுபிடிப்பு

(வவுனியா)

வவுனியா நகரசபை நிர்வாகத்திற்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்த ஐந்து அரிசி மில் ஆலைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

மேற்படி மில் ஆலைகளில் பொருத்தப்பட்டிருந்த சட்டவிரோத மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடமிருந்து அபராதத்தொகை பெறப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபையின் மின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் செல்வி எஸ். சிதம்பரப்பிள்ளை இந்த சட்டவிரோத மின் இணைப்புகளைக் கண்டு பிடித்தார் என்றும் இன்னும் பல இடங்களில் திருட்டு மின்சாரம் உபயோகிக்கப்பட்டு வருவதாகவும் வவுனியா நகரசபையின் செயலாளர் திரு. இராசா தணிகாசலம் தெரிவித்தார். (இ

எழுத்து

டில்லியில் ராஜசபையிலும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம். பி. அமைதிப்படை பற்றிய பிரச்சனையைக் கிளப்பினார்.

இலங்கையில் ஐயாயிரம் தமிழர்களை அமைதிப்படை கொலை செய்தது என்று சில பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருக்கின்றனவே இது உண்மையா? என்று அரசாங்கத்தைக் கேட்டு ''இல்லை, உண்மையில்லை'' என்று பதில்பெறலாமென்ற நோக்கத்துடனேயே இந்தக் கேள்வியை தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர் கேட்டார்.

அந்தச்செய்தி உண்மைதான் அமைதிப்படை ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களைக் கொன்று குவித்திருக்கிறது என்பது உண்மையே என்று தி. மு. கழக எம். பி தி. வை. கோபாலசாமி கூறவும் அதை இதர தி. மு. க. எம். பிக்களும் ஆதரித்தனர். இதை காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தனர். சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டு அமைதியை நிலைநாட்டுவதற்கு சபைத்தலைவருக்கும் பெரும்பாடாய்ப் போயிருக்கிறது.

தேசிய ஒருமைப்பாட்டிலும், தேசபக்தியிலும் காங்கிரஸ்காரர் விழிப்புடனிருப்பதாகக் காட்டிக்கொள்வதும் இந்திய இராணுவத்தின் 'தார்மீக' நெறியைக் குலைத்துவிடக் கூடாதென்பதிலும். வெளிநாடுகளில் இந்திய இராணுவத்தின் மதிப்புக் குறைந்துவிடக்கூடாது என்பதில் தங்களுக்குத்தான் உண்மையாக அக்கறை உள்ளதென காட்டிக்கொள்வதும்தான் தமிழ்நாடு காங்கிரஸ்காரரின் திட்டமாக இருந்திருக்கிறது.

கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேசமாக உருவெடுப்பதற்குக் காரணமாக இருந்த இந்திய இராணுவம் சில தினங்களுக்குள்ளேயே அங்கு செய்த அட்டூழியங்கள் கிழக்குப் பாகிஸ்தான்தான் மட்டுமல்ல முழு உலகமுமே தெரிந்த உண்மை.

இலங்கையில் அமைதிப்படைக்குத் தலைமை தாங்கிய ஜெனரல் கல்கத் தமது படையின் தோல்விக்கும் தவறுகளுக்கும் இந்திய மத்திய புலனாய்வுத்துறையின் ஆய்வுப் பகுப்புப் பிரிவான 'றோ'வின் தவறான வழி நடத்தலும் தப்புக் கணக்குமே காரணமென்று உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இந்திய இராணுவத்துக்குத் தமிழ் நாடு காங்கிரஸ்காரர் முண்டு கொடுக்கப் பார்க்கிறார்கள். விரைவில் அவர்களும் இதன் சுவையை அனுபவிக்கும் காலம் வரலாம்.

திரம் அல்லவே, அவர்களுக்கு ஓய்வு தேவை இல்லையா? ஒரு ஊழியன் 12 மணித்தியாலம் சாப்பாட்டு நேரம்

மாக நம்புகிறேன்.

நன்றி

மு, க. ஈழவேந்தன்

வவுனியா

## வடக்கிலிருந்து விமான சேவை

ஆசிரியர்

நமது (காங்கேசன் துறை) பலாலி விமானநிலையம் ஊடாக தென்இந்தியாவில் சென்னை, திருச்சி, திருவனந்தபுரம் ஆகிய நகரங்களுக்கும், மற்றும் யாத்திரிகன் சென்றுவர, நமது யாழ் வாசிகளுக்கு விமானசேவையை மிக அவசியம். யாழ்ப்பாணம் சென்னை, திருச்சி, திருவனந்தபுரம் விமானசேவை ஒரு வரப்பிரசாதகமாக விளங்கும் இதனால் நமது அரசுக்கும் விமானசேவைகளுக்கும் அன்னிய செலாவணி கிட்டும். மேலும் இதனால் சுங்க இலாகாவுக்கும் தீர்வையில் உயர்வும் கிட்டும் மக்கள் இவ்விடமிருந்து கொழும்பு சென்று டிக்கட் கிட்டாமலும் கஷ்டப் படுகிறார்கள். நமது யாழ்ப்பாணமார்க்கமாக இவ்விமான சேவை அமைத்தால் மிகவும் மக்களுக்கு பேருதவியாக இருக்கும்.

இச்சேவையை நடத்துவதற்கு நமது அரசு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் இவ்விடம் யாழ்ப்பாணத்தில் விமான சேவை அலுவலகம் ஒன்று நிறுவினால் மக்கட்கும் மிகுந்த பேருதவியாகும் இது விஷயத்தை கவனித்து ஆவன செய்யக்கோருகிறேன்.

S. துரைசாமி ஐயர்

பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்.

## அபிவிருத்தி நடவடிக்கையில் அங்கவீனர்களையும்சேர்க்கவும்

-விஜயதுங்க

(கொழும்பு)

அங்கவீனர்களையும் நாட்டின அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பங்கு கொள்ளச் செய்வது அரசாங்கத்தினதும் மக்களினதும்முக்கிய பொறுப்பாகும் என்று பிரதம மந்திரியும் நிதியமைச்சருமான பி. டி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார். அங்கவீனர்களையும் சமூகத்திலோர் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தகவல்களைத் பரிமாறல் தொடர்பாக பத்திரிகையாளர்களுக்குநடைபெற்ற பயிற்சிக் கருத்தரங்கொன்றில் பிரதம மந்திரி இவ்வாறு தெரிவித்தார். அங்கவீனர்கள் தொடர்பாக சமூகத்தில் காணப்படுப்போக்கை மாற்றி அவர்களைஏனையவர்களைப் போல் சமூகத்தின் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வைக்க வெகுசனத் தொடர்புத்துறையினர் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்று பிரதம மந்திரி கேட்டுக் கொண்டார்.

சமூக நலன்துறை இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. சில்வா உரையாற்றுகையில் அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலுமுள்ள பதவி வெற்றிடங்களில் மூன்று சத விதத்தை அங்கவீனர்களுக்குஒதுக்குவது என்ற அரசாங்கத்தின் தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கத்துறையினரும் தனியார் துறையினரும் நடவடிககைகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

துண்டிக்கப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடமிருந்துஅபராதத்தொகை பெறப்பட்

வவுனியா நகரசபையின் செயலாளர் திரு. இராசா தணிகாசலம் தெரிவித்தார். (தி

பிரதேச சபை

## உத்தியோகத்தர்களுக்கு மேசை, கதிரை இல்லை!

(வேலணை)

வேலணை பிரதேச சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர் பலருக்கு, அவர்கள் இருந்து கடமையாற்றுவதற்கான மேசை, கதிரைகள் இல்லாமலிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

இதேபோல்தான் அங்குள்ள பொதுசன நூல் நிலையத்திலும் வாசகர்கள் இருந்து பத்திரிகைகளை வாசிக்க முடியாத நிலையில் தளபாட வசதிகளும் அங்கில்லை எனப் பொதுமக்களும், வாசகர்களும் குறைகூறி வருகின்றார்கள். (14)

## வவுனியாவில் 253 பேர் தொண்டராசிரியர் விண்ணப்பம்

(வவுனியா)

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர நியமனம் செய்வது சம்பந்தமாக வெளிவந்த அறிக்கையை அடுத்து வவுனியா கல்வித் திணைக்களத்திற்கு 253 தொண்டர் ஆசிரியர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

நிரந்தர நியமனத்திற்காக தொண்டர் ஆசிரியர்கள் விண்ணப்பிக்கும் திகதிமுடிவடைந்து விட்டதென்றும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் ஆராயப்படுமென்றும் சம்பந்தப் பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தி)

## மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் விமானப்படை சிரமதானம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசாங்க வைத்திய சாலையின் 4ஆம் பகுதிஸ்ரீலங்காவிமானப்படையினரால் அண்மையில் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

ஸ்ரீலங்கா விமானப் படையின் 39 ஆவது ஆண்டு நிறைவு தினமன்று மட்டக்களப்பு முகாம் படையினர் இப்பணியில் ஈடுபட்டனர்.

வாட் கட்டிடம், சுற்றாடல் நோயாளர் படுக்கை, மலசல கூடம், உபகரணங்கள் என்பன துப்பரவு செய்யப்பட்டன.

மின்உபகரணங்களும் ஏனைய உபகரணங்ளும் திருத்தம் செய்யப்பட்டன.

அன்றைய தினம் நோயாளர்களுக்கு விமானப்படையினரால் உணவும் வழங்கப்பட்டது. (37)

## எழுத்து சீர்திருத்தம் பாடசாலைகளில்

(விசேட நிருபர்)

யாழ் - குடாநாட்டில் பாடசாலைகளில் எழுத்துச் சீர்திருத்தம் இரண்டாவது தவணையுடன் தான் ஆரம்பமாக இருக்கிறது.

முதல் தவணை இறுதிக் காலங்களிலேயே எழுத்துச் சீர்திருத்தத்தை போதிக்கத் தொடங்கி விட்டது ஒரு பாடசாலை.

அந்த முன்னோடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது யாழ் பெரியபுலம் மகா வித்தியாலயம்தான்.

ஆண்டு ஒன்றில் இருந்தே எழுத்துச் சீர்திருத்தத்தை தமது மகா வித்தியாலய ஆசிரியர்கள் போதிக்கத் தொடங்கிவிட்டார்களென்று நமது விசேட நிருபரிடம் வித்தியாலய அதிபர் திரு. க. கனகசிங்கம் பெருமையாகக் கூறினார். (21)

## ரயில் சாரதிக்கு அபிடேகம்

(கோண்டாவில்)

ரயில் சாரதிக்கு கோழி முட்டையும், தண்ணீரும் வீசி எறியப்பட்டு அபிடேகம் செய்யப்பபட்டது.

யாழ். வளாகத்துக்கருகில் ஆத்திசூடி வீதியில் ஏப்ரல் முதலாம் திகதியான நேற்று இந்தச் செயல் நடந்தது. இதனால் கொழும்பு செல்ல வேண்டிய ரயில் குறிப்பிட்ட இடத்தில் சில நிமிட நேரம் தரித்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டதுடன், இது குறித்து மேற்படி சாரதியால் மேலிடத்தக்கு புகார் தெரிவிக்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது. (34

ஈழநாதம்

# மீன்பிடித் தொழிலாளர் கருத்தரங்குத் தீர்மானங்கள்

(யாழ்ப்பாணம்)
நேற்று மனோகரா தியேட்டரில் நடந்த மீன்பிடித் தொழிலாளர்களுடனான கருத்தரங்கில் பின்வரும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. இவை தற்காலிகமாக சடுமையாக கடைப்பிடிக்கப்படவேண்டும் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மடித்தொழில் செய்வோர் இரும்புச் சங்கிலிகளுக்குப் பதிலாக ஒரு அடிக்கு இரண்டு அங்குலம் என ஈயம் பாவிக்க வேண்டும்.

பாய்வலைகள் பாவிக்கக் கூடாது.

ஏனையதொழிலாளர்களின் தொழில் பாதிக்காதவகையில் ரோலர் தொழிலாளர் தொழில் புரியவேண்டும்.

இவை தவிர ஏற்கனவே நடைமுறையில் உள்ள டைனமெற் பாவித்தல் நஞ்சு இட்டு மீன்பிடித்தல் என்பனவும் தடைசெய்யப்பட்டுள்ளது.

(லோ)

# “களைய வேண்டுமென்போர் ஆயுதங்களை ஏன் ஏந்தினோம் என்பதை சிந்திக்க வேண்டும்”

**- தலைவர் பிரபாகரன்**

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென சிங்கள இனவாதப் பத்திரிகைகள் குரலெழுப்பி வருவதைக் காணும்போது வேதனையாக இருக்கின்றது. ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பாமல், எதற்காக எமது விடுதலை இயக்கம் ஆயுதங்களை ஏந்தியது எதற்காக நாம் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆயுதப் போராட்டத்தை நடத்தினோம், இதற்கான காரணிகள் என்ன என்பதைச் சிங்கள மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆயுதப் போராட்டம் தோன்றி வளர்ந்த யதார்த்த நிலைகளை ஆராய்ந்து பார்த்து அதன் காரணிகளை நீக்கி விட உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் ஆயுதப் பிரச்சினை தானாகத் தீர்ந்துவிடும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்தார்.

மேலும் இச்செய்தி,

இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தை எதிர்கொண்டு இருக்கிறது.

இந்தியத் இராணுவத் தலையீட்டை நாம் வெற்றிகரமாக முறியடித்துள்ளோம். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது தாய்மண்ணிலிருந்து முற்றாக வெளியேறிவிட்டது. இந்திய வல்லாதிக்க தலையீட்டிற்கு ஒரு முடிவு காணப்பட்டமை எமது விடுதலைப் போராட்டத்திற்குக் கிட்டிய ஒரு மகத்தான வெற்றியாகும். ஏனென்றால் எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கி அப்போராட்டத்திற்கு

அரசின் தவறான கொள்கையையும், இராணுவத் தலையீட்டையுமே நாம் எதிர்த்தோம். எமது பிரச்சினையில் இந்திய அரசு இராணுவ ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ தலையிடுவதை நாம் விரும்பவில்லை. எமது மக்களின் நியாயபூர்வமான போராட்டம், இந்தியாவின் அரசியல் பூகோள நலன்களுக்கோ அல்லது உள்நாட்டு ஸ்திர நிலைக்கோ பங்கம் விளைவிக்காது என்பதை டில்லி ஆட்சிபீடம் உணர வேண்டும் இந்தப் புரிந்துணர்வின் அடிப்படையில் புதிய இந்திய அரசு எமது இயக்கத்துடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ள முன்வர வேண்டும். எமது மக்களின் நியாய பூர்வமான போராட் டத்திற்கு இந்திய அரசும்,

போராடுவதற்குச் சிறிதேனும் தயங்க மாட்டோம்.

நாம், நீண்ட காலமாக ஆயுதப் போர் வடிவத்தில் எமது போராட்டத்தை முன்னெடுத்து வந்திருக்கிறோம். ஆயினும், வரலாற்றுச் சூழ்நிலைக்கும், காலத்தின் கட்டாயத்திற்கும் ஏற்ப, எமது போராட்ட வடிவங்களில் மாறுதல்கள் ஏற்பட்டும் வந்தன. எமது இலட்சியப் பாதையில் இப்படியான வடிவ மாற்றங்கள் எழுவது சகஜம். இன்று எமது கட்சியமைப்பைக் கட்டி எழுப்ப, ஜனநாயக அரசியல் வடிவத்தைத் தழுவிக்கொள்ள நாம் தீர்மானித்திருக்கிறோம். எமது விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக விரிவுபடுத்தி, புலிகளே, தமிழ் ஈழ மக்களின் உண்மையான பிரதி

கருத்துமாக இருந்தது. இந்திய அரசு இழைத்த இமாலயத் தவறு இது. இந்தத் தவறிற்கான கசப்பான வரலாற்று அனுபவத்தை இந்திய அரசு பெற்றுவிட்டது. இந்தியா இழைத்த இந்தப் பெரும் தவறை சிறிலங்கா அரசும் செய்யமாட்டாது என்றே நாம் நம்புகிறோம்.

சிறிலங்கா ஆயுதப்படைகளுக்கும் விடுதலைப் புலி வீரர்களுக்கும் மத்தியில் இப்பொழுது போர் நிறுத்தம் நிலவுகிறது. எனினும், எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு ஏற்படவில்லை. எமது மக்களின் பொருளாதார வாழ்வு சீர்குலைந்த நிலையில் இருக்கிறது. யுத்த அழிவுகளால் எமது கிராமங்களும், பட்டி

சுமுகமாக தீர்க்கப்படாதவரை ஆயுதப் பிரச்சினை தீரப்போவதில்லை. இதனை சிறீலங்கா ஆட்சியாளரும், சிங்கள மக்களும் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள் என நம்புகின்றேன்.

எமது மக்களுக்கு ஒரு சுபீட்சமான எதிர்காலத்தையும், நிரந்தரமான அமைதியையும், சுதந்திரமான வாழ்வையும் பெற்றுக் கொடுக்க எமது விடுதலை இயக்கம் தொடர்ந்து போராடும். இன்று எமது மக்களின் நம்பிக்கையின் நட்சத்திரமாகத் திகழ்வது எமது இயக்கம் தான். எமது இயக்கத்தை ஒரு பலம் பொருந்திய தேசிய சக்தியாக கட்டி எழுப்புவதற்கு தமிழ், முஸ்லிம் மக்கள் எமது இயக்கத்தின் பின்னால் அணிதிரள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.



பத்திரிகையாளர் மாநாட்டில் தலைவர் பிரபாகரனுடன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பிரதித்தலைவர் மகேந்திரராசா ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## டிக்ஷித்தின் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கைத் திணித்து வந்ததால் என்றோ ஒரு நாள் இந்தியாவுடன் நாம் மோதவேண்டி வரும் என முன்னரே எண்ணியிருந்தோம்.

ஆனால் நாங்கள் இன்றும் இந்தியவுடன் இன்றைய அரசிற்கோ, மக்களுக்கோ எதிரிகள் அல்லவென்றும், ஆனால் இந்தியாவின் இராணுவத் தலையீட்டை இனிமேலும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்ததோடு, இந்தியாவின் தார்மீக ரீதியான உதவியை நாங்கள் என்றும் எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

## புலிகள் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ந்து, பல லட்சக் கணக்கான

## வடக்குக்கிழக்கு...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)
களைச் சந்திப்பதில் தான் மகிழ்ச்சி அடைவதாகவும், இப் பத்திரிகையாளர் மகாநாட்டின் மூலம் தன்னைப் பற்றிய பல்வேறு வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுவதாகவும் தெரிவித்தார் பின்னர் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார்.

## ஆறாவது திருத்தம்

அதைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த பிரபாகரன் ஆறாவது திருத்தச் சட்டம் நீக்கப்படாவிடில் தேர்தலில் விடுதலைப்புலிகள் போட்டியிடப் போவதில்லை எனத் தெரிவித்தார் மேலும் இலங்கை அரசு எந்தவிதமான நிபந்தனையும் அற்ற ரீதியிலேயே தம்மைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்ததென்றும் அதனாலேயே தாம் பேச்சுவார்த்தைக்குப் போனோம் எனவும் தெரிவித்தார். மேலும் நாங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வைத்தே போராடினோம் ஆகையால் விட்டுக்கொடுப்புக்களை அவர்கள் செய்ய வேண்டுமே ஒழிய நாங்கள் அல்ல எனவும் தெரிவித்தார்.

### மாகாணசபை

மாகாணசபை அமைப்பில் தாங்கள் இப்பொழுது பங்கு பற்றப்போவதாகவும் ஆனால் அதில் இருந்து நாம் எமது உரிமைகள் பற்றிப் பேசுவோம் எனவும்தெரிவித்தார். ஆனால் ஐக்கிய இலங்கையைப் பற்றி நாங்கள் பேசப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

## ஆய்வை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
காமப் பகுதிப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலுக்கு வட மாகாணத்தைச் சேர்ந்த நாற்பதுக்கும் மேற்பட்ட மீன்பிடித்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் நூற்றுக்கணக்கானோர் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இக்கலந்துரையாடலில் பல கடற்றொழிலதிகாரிகளும் பங்குபற்றினர். அவர்களில் யாழ் மாவட்டக் கடற்றொழில் அபிவிருத்திச் சங்க ஒன்றிய செயலாளர் எல்.பி. பிலிப்ஸ் பேசும்போது கடந்த காலங்களில் எந்த ஒரு தொழிலாளியும் அடையாத கஷ்டங்களை மீன்பிடித் தொழிலாளர்கள் அடைந்துள்ளனர். ஆகவே தொடர்ந்தும் நாம் எம்மாலேயே எதற்காகப் பிரச்சினைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்? நாமே எமது பிரச்சினைகளை அவை தோன்றும் பொழுதே தீர்த்துவிட வேண்டும். இதுவே தமிழ் ஈழத்தின் பொருளாதார மேம்படுத்தலுக்கு நாம் செய்யும் கடமையாகும் என்று குறிப்பிட்டதுடன், நான்கு அம்சங்கள் கொண்ட ஒரு ஆலோசனையையும் முன்வைத்தார்.

அவையாவன; ஒவ்வொரு தொழிலாளியும் அண்மைக்கால பிரச்சினைகளால் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் அவர்களுடைய குடும்ப நிலைமை. அவர்கள் தமது தொழில் மீன்பிடிப் பொருளாதாரத்திற்குத் தீங்கு விளைவிப்பதாக இருக்குமானால் அதற்குப் பதிலீடாக அவர்கள் என்ன தொழில் செய்யலாம் என்ற விடயங்களை உள்ளடக்கிய புள்ளிவிபரங்கள் சேகரிக்கப் படவேண்டும்.

கடற்றொழிலாளர்களின் நலனை முழுமையாகக் கொண்டு கடற்றொழில் காப்புறுதிச்சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அதில் கடற்றொழிலாளர் விபத்துறுதி உட்பட வறுமையுற்ற கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளுக்குக் கல்வியை வளர்ச்சியூட்டுவதற்குப் புலமைப் பரிசில் திட்டங்களை கொண்டுவரவேண்டும்.

கடற்றொழில் வங்கி ஒன்று எமது கடற்றொழிலாளர் மத்தியில் அறிமுகம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு நிறுவ முடியாவிடினும் கடற்றொழிலாளருக்கு நிதி நெருக்கடி ஏற்படும்போது உதவி செய்யவென ஒரு நிதிசம்பந்தப்பட்ட அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

பாலசிங்கம் பிரதித் தலைவர் மகேந்திரராசா ஆகியோரும் காணப்படுகின்றனர்.

வெற்றியாகும். ஏனென்றால் எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கி அப்போராட்டத்தின் எழுச்சி வடிவமான எமது இயக்கத்தை அழித்து விடவே இந்திய இராணுவம் இங்கு அனுப்பப்பட்டது. இந்த நோக்கத்தை நிறைவேற்றும்முகமாகவே இந்தியா எம்மீது முழு அளவிலான ஒரு யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டது.

இந்த யுத்தமானது உலக வரலாற்றிலேயே ஒரு முக்கியம் வாய்ந்த நிகழ்வு. ஆசியாவின் ஒரு பெரிய வல்லரசை எதிர்த்து, ஒரு பாரிய இராணுவ சக்தியை எதிர்த்து, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நாம் இரத்தம் சிந்திப் போராடினோம். இந்த யுத்தத்தில் எமது போராளிகளும், பொதுமக்களும் செய்துள்ள அற்புதமான தியாகங்கள், உலக வரலாற்றில் ஒரு ஒப்பற்ற வீரகாவியமாகப் பொறிக்கப்பட்டுவிட்டது. ஒடுக்கப்படும் மக்களின் நியாயபூர்வமான போராட்டத்தை, அவர்களின்சுதந்திர தாகத்தை எந்த ஒரு சக்தியாலும் அடக்கி விடவோ, அழித்துவிடவோ முடியாதென்பதை இந்த யுத்தத்தில் நாம் ஈட்டிய வெற்றி உலகிற்கு ஒரு உன்னத உதாரணமாக அமைந்துவிட்டது.

இந்தியாவின் இராணுவத் தலையீடும், அதன் விளைவாக ஏற்பட்ட பேரழிவுகளும் தமிழீழ மக்களுக்கு ஒரு நல்ல பாடத்தைப் புகட்டியிருக்கிறது. அதாவது, நாம் எந்த அந்நிய சக்திகளிலும் தங்கியிராது, எமது உரிமைகளை நாமே போராடி வென்றெடுக்க வேண்டும் என்பது தான் இந்தப் பாடம்.

இந்திய அரசுக்குத் துணைபோன துரோகக் கும்பல்களும் இந்த அரசியல் உண்மையை இப்பொழுது உணர்ந்திருப்பார்கள் என நம்புகிறேன்.

## நாம் இந்தியாவிற்கு விரோதிகளல்ல

நாம் இந்திய அரசுக்கோ, இந்திய மக்களுக்கோ விரோதிகள் அல்லர். முந்திய இந்திய... டத்திற்கு இந்திய அரசும், இந்திய மக்களும் ஆதரவையும், அங்கீகாரத்தையும் வழங்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.

## ஆயுதமேந்தத் தயங்க மாட்டோம்

கிட்டத்தட்ட ஒரு வருட காலமாகச் சிறிலங்கா அரசுடன் நாம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி வருகிறோம். இந்தப் பேச்சுக்கள் பரஸ்பர நம்பிக்கையுடன் ஆக்கபூர்வமான முறையில் முன்னேற்றம் கண்டு வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தச் சமாதானப் பேச்சுக்களின் பயனாக இன்று தமிழ் ஈழத்தில் அமைதியும், சகஜ நிலையும் தோன்றியிருக்கிறது. இன ஒடுக்குமுறையாலும், இராணுவ அடக்குமுறையாலும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதனை இன்றைய சிறிலங்கா அரசு உணர்ந்திருப்பதுபோலத் தெரிகிறது. ஜனாதிபதி பிரேமதாசாவின் துணிச்சலான, புதிய அணுகுமுறை காரணமாகவே இன்று இந்த நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அமைதி நிலை நீடித்து, எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக பாதுகாப்பாக வாழ வேண்டுமென்பதே எமது விருப்பம். இது சிங்கள அரசியற் தலைவர்களதும், சிங்கள மக்களதும் பார்வையையும், அணுகுமுறையையும் பொறுத்திருக்கிறது. வரலாற்று ரீதியாக எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதிகளையும், தவறுகளையும் சிங்கள மக்கள் நன்குணர்ந்து, மனித நீதியின் அடிப்படையில் மனித தர்மத்தின் அடிப்படையில் எமது பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டும். எமது மக்களுக்கு நீதி வழங்க மறுத்து, மீண்டும் எம்மீது அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படுமானால், நாம் எமது மக்களின் சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் நிலை நாட்ட ஆயுதம் ஏந்திப்... மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்பதை நாம் உலகிற்கு எடுத்துக்காட்டுவோம்.

## சனநாயக அரசியலுக்கு விரோதிகள் அல்லர்

ஜனநாயக அரசியல் மரபுக்கு நாம் விரோதமானவர்களல்லர். எமது மக்களின் அடிப்படையான, ஜனநாயக அரசியல் உரிமைகளுக்காகவே நாம் போராடி வருகிறோம். சமூக நீதியும், ஜனநாயக சுதந்திரங்களும் தழைத்தோங்கும் ஒரு உன்னத சமுதாயத்தைக்கட்டி எழுப்புவதே எமது அரசியல் இலட்சியமாகும். இந்த இலட்சியத்திற்கு இடையூறாகவுள்ள ஒடுக்குமுறை வடிவங்களை முற்றாகக் களைந்தெறிய சிறிலங்கா அரசு முன்வர வேண்டும். அப்பொழுதுதான், அரசியல் நீரோட்டத்தில் உண்மையான ஜனநாயக தர்மம் மலர முடியும்.

## இலங்கை தவறு செய்யாது

எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஒரு உருப்படியான, நிரந்தரமான அரசியல் தீர்வை முன்வைக்காமல், ஆயுதங்களை சரணடையுமாறு இந்திய அரசு எம்மை நிர்ப்பந்தித்தது. இதனால் ஒரு பெரிய யுத்தமே வெடித்தது. முழு அளவிலான இராணுவ பலத்தை பிரயோகித்தும், ஆயுதங்களை களைந்து விடும் நோக்கில் இந்திய வல்லரசானது பெரிய தோல்விகளைத் தான் சந்தித்தது. நீண்ட காலமாக ஒடுக்கப்பட்டு, இன அழிவை எதிர்கொண்டு வந்த எமது மக்களின் உரிமைகள் பற்றியோ, நலன்கள் பற்றியோ பாதுகாப்புப் பற்றியோ எந்தவித அக்கறையும் காட்டாமல், எமது மக்களின் பாதுகாப்பு அரணாக விளங்கிய ஆயுதங்களைப் பறித்தெடுக்க வேண்டும் என்பதில் மட்டும் இந்திய அரசு கண்ணும்... எமது கிராமங்களும், பட்டினங்களும் சுடுகாடு போல காட்சி அளிக்கின்றன எமது மக்களுக்கு எதிராக ஏவப்பட்ட ஒடுக்குமுறை வடிவங்கள் முற்றாக இன்னும் நீங்கியபாடில்லை. அரச பயங்கரவாதத்தால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் மாறிவிடவில்லை. எமது மக்கள் தமது பாதுகாப்பு குறித்து இன்னும் அஞ்சிய நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். இந்த சூழ்நிலையில், ஆயுதங்களைப் போட்டதும் இனப் பிரச்சினை தீர்ந்துவிடும் எனக் கருதுவது மிகவும் தவறான கண்ணோட்டமாகும் பூதாகரமாக வளர்ந்து விட்ட இனப் பிரச்சினையும், அதனால் எழுந்த சுதந்திர வேட்கையின் புரட்சிகர வெளிப்பாடாகவே ஆயுதப் போர் வடிவம் தோற்றம் கண்டது. ஆகவே, இனப்பிரச்சினை

---

## அன்னை . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோர் முன்னுதாரணமாக அன்னையவர்கள் செயல்பட்டுள்ளார். அவரை நினைவு கொள்வது அனைவரின் கடமையாகும் என்று குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. தினேஷும் கலந்து கொண்டார். (தி)

---

## தென்மராட்சி . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், சாவகச்சேரி தபால் நிலையம், தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலை, நகரசபை அலுவலகம், கிராமிய வங்கி, பலநோக்கு கூட்டுறவு தலைமைக் காரியாலயம் ஆகிய இடங்களில் பயிலுநர்களாக இருக்கிறார்கள். (35)

---

## புலிகள் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ந்து, பல லட்சக் கணக்கான மக்கள் குவியும் இந்த ஆலயத்தில் கடந்த இரு வாரங்களிலும் எது வகையான அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (35)

---

## பத்து லட்சம் . . .

1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில், இவ்வைபவம், வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றும்போது,

வடமராட்சி கிழக்கில் காணப்படுகின்ற பல்வேறு குறைபாடுகள் காலக்கிரமத்தில் தீர்த்து வைக்கப்படும். இப்பிரதேசத்தின் முன்னேற்றத்திற்கு என்னால் இயன்ற உதவிகளைப் புரிவேன். புதிய உதவி அரசாங்க அதிபர் பணிமனையும், விடுதியும் 10 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும்.

இப்போட்டியினைப் பார்க்கும்போது, இப்பகுதி மக்கள் மிகவும் கட்டுப்பாட்டுடனும், ஒழுக்கத்துடனும் வாழ்கின்றவர்கள் என்று தெரிய வருகிறது.

யாழ். செயலகத் தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

போட்டிடல் வெற்றியீட்டிய வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் திருமதி அன்ரன் அல்பிறட் பரிசில்களை வழங்கினார்.

ஆழியவளை கிராமசேவையாளர் திரு. வி. நடராசா நன்றியுரை வழங்கினார். (86)

நாங்கள் பேசப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

## தமிழீழத்திற்கு குறைவான தீர்வு

தமிழீழத்திற்குக்குறைவான தீர்வு எதையும் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா எனக் கேட்டதற்கு தமிழீழத்திற்கு ஈடான மாற்றுத்திட்டம் எதையும் ஸ்ரீலங்கா அரசு முன்வைக்குமானால் நாங்கள் அதனைப் பரிசீலிப்போம் எனவும் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணநிர்வாகத்தைப் பற்றிக் கேட்கப்பட்டதற்கு இப்பகுதியின் முழு இறைமையும் அந்நிய இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததென்றும், அதை நாங்கள் இறுதிவரை போராடி மீட்டெடுத்துள்ளோம் என்றும் தெரிவித்ததோடு இப்பொழுது அதை நாங்கள் நிர்வகிக்க முற்படுகிறோம் என்றும் தெரிவித்தார்.

ஏனைய இயக்கங்களில் இருந்தவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து உங்களுடன் இணைந்து செயற்பட அனுமதிப்பீர்களா எனக்கேட்டதற்கு அவ்வாறு அவர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லைஎனவும் தெரிவித்தார்.

## ஈரோஸ் இயக்கம்

ஈரோஸ் இயக்கத்துடன் உங்கள் இயக்கத்தின் உறவுநிலை எவ்வாறு உள்ளது என வினாவியதற்குஈரோசுடனானஉறவு தற்பொழுது சீராக இல்லை எனவும்,ஆகையினால்ஈரோஸ் செயலாளர் நாயகம் வே.பாலகுமாரைச் சந்திக்கும் எண்ணம் தற்போதைக்கு இல்லை என்றும் தெரிவித்தார். மேலும் குறிப்பிடுகையில் கடந்தகாலத்தில் ஈரோஸ் இயக்கத்தினர் எந்தவிதமான உறுதியான முடிவையும் எடுக்கவில்லை எனவும், எல்லோரையும் திருப்திப்படுத்தும் முடிவையே அவர்கள் எடுத்தார்கள் எனவும் குறிப்பிட்டார்.

வென ஒரு நிதிசம்பந்தப்பட்ட அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

கடற்றொழிலாளர் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்ப்பதற்கென ஒவ்வொரு கிராமங்களிலும் சிறுசிறுகுழுக்கள் அல்லது ஆலோசனைச் சபைகள் உடனமைக்கப்பட வேண்டும் என்று அவர் தனதுரையில் கூறினார்.

இக்கலந்துரையாடலில் திருதி. சச்சிதானந்தன் கடற்றொழில் விரிவாக்க உத்தியோகஸ்தர் பேசும்போது: கடற்றொழிலைப் பொறுத்தமட்டில் எந்தத் தொழிலையும் தடுத்து நிறுத்துவதற்கு எமக்கதிகாரமில்லை என்றாலும் ஒரு தொழிலாளியின் தொழிலைப் பாதிக்கும் வகையில் இன்னொரு தொழிலாளி தொழில் செய்ய முடியாது என்றார்.

---

## சாவகச்சேரி . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு மணிக்குப் பூட்டப்படும். ஞாயிறு தினங்களில் முழு நாளும் பூட்டப்பட்டிருக்கும் என்று சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

இப் புதிய நடைமுறையை சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் மார்ச் 30 ஆம் திகதி முதல் அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது முன்பு ஞாயிறு அரை நேரமும், திங்கள் முழுநேரமும் வர்த்தக நிலையங்கள், கடைகள் அடைக்கப்பட வேண்டும் என்பது நடைமுறையில் இருந்து வந்தது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளர்,அரசியற் பொறுப்பாளர், வர்த்தக சங்கத்தினர்,வர்த்தக ஊழியர் சங்கத்தினர், வகுப்பு ஊழியர் சங்கத்தினர் இணைந்து நடத்திய ஆலோசனையைத் தொடர்ந்தே இப்புதிய முறை அமுல் செய்யப்பட்டுள்ளது. (35)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது